## எவ்வாறு பிணை வழங்குவது?

### படி 1

பிணை வழங்குபவர், **அரசு நீதிமன்றங்களில் அமைந்துள்ள பிணை நிலையத்தின் (தளம் 4)** பதிவு நேரங்களின் போது, பின்வரும் பத்திரங்களைக் கட்டாயமாக கொண்டுவந்து பிணை வழங்கவிருப்பதாக ஒரு விண்ணப்பம் செய்யவேண்டும்.

- பிணை வழங்குபவரின் அடையாள அட்டை அல்லது கடவுச்சீட்டு
- குற்றஞ்சாட்டப்பட்டவரின் கடவுச்சீட்டு.
- துணை ஆவணங்கள்

கடைசி பதிவு:

**காலை நேரம்**

- திங்கள் முதல் வெள்ளி வரை பிற்பகல் 12.30 வரை

**பிற்பகல் நேரம்**

- திங்கள் முதல் வியாழன் வரை மாலை 5 வரை
- வெள்ளி அன்று மாலை 4.30 வரை

### படி 2

பிணை நிலையத்தில் உள்ள அதிகாரி:

- உத்தேச பிணை வழங்குபவர் பிணை நிபந்தனைகளை நிறைவு செய்கின்றார் என்பதை உறுதிசெய்ய அவரை நேர்காணல் செய்வார்.
- பிணை வழங்குபவரின் கடமைகள் குறித்து உத்தேச பிணை வழங்குபவரிடம் விளக்குவார், மற்றும்
- துணை ஆவணங்களைச் சரிப்பார்ப்பார்.

### படி 3

அதன் பின்னர், குற்றஞ்சாட்டப்பட்டவருக்குப் பிணை வழங்குபவராக இருக்க பிணை வழங்குபவர் தகுதியுள்ளவரா என்று மேஜிஸ்திரேட் மதிப்பிடுவார்.

- <u>பிணை விண்ணப்பம் ஏற்றுக் கொள்ளப்பட்டால்:</u> குற்றஞ்சாட்டப்பட்டவர் காவலில் இருந்து விடுவிக்கப்படுவார்.

- <u>பிணை விண்ணப்பம் நிராகரிக்கப்பட்டால்:</u> தகுந்த பிணை வழங்குபவர் கிடைக்கும் வரை குற்றஞ்சாட்டப்பட்டவர் காவலில் இருப்பார்.

## துணை ஆவணங்கள்

### <u>பணம் சார்ந்த பிணை</u>

**<u>சேமிப்பு கணக்கு</u>**

- அசல் வங்கி புத்தகம் அல்லது வங்கிக் கணக்கில் இருக்கும் மீதத் தொகையைக் குறிக்கும் சீட்டு அல்லது வங்கிக் கணக்கின் மின்-அறிக்கை.
- பிணை வழங்குபவர் வங்கிக் கணக்கின் உரிமையாளராக இருக்க வேண்டும்.
- அத்தொகை ஒரு வித உத்தரவாதமாக பயன்படுத்தப்பட்டிருக்கக்கூடாது.
- GIRO ஏற்பாடு இருக்கக் கூடாது.
- வங்கிக் கணக்கு பிணை வழங்கப்படும் தேதிக்குப் புதுப்பிக்கப்பட்டிருக்க வேண்டும்.

**வழக்கு முடியும் வரை பிணை தொகை வங்கியால் முடக்கப்பட்டிருக்கும்.**

**<u>நிலையான / கால வைப்பு நிதி</u>**

- பிணை வழங்குபவர் வங்கிக் கணக்கின் உரிமையாளராக இருக்க வேண்டும்.
- வங்கிக் கணக்கு பிணை வழங்கப்பட்ட நாளிலிருந்து 6 மாதத்திற்குச் செல்லுபடியாக இருக்க வேண்டும்.
- அந்த வங்கி கணக்கு ஏற்கனவே ஒருவித உத்தரவாதமாக பயன்படுத்தப்பட்டிருக்கக்கூடாது.
- அசல் வைப்பு சீட்டு பிணை நிலையத்தில் சமர்ப்பிக்கப்பட வேண்டும்.

***<u>இருவர் பிணை வழங்கலாம் என்று நீதிமன்றம் அனுமதி வழங்கினாலன்றி கூட்டு நிலை அல்லது சேமிப்பு வங்கிக் கணக்குகள் பயன்படுத்தப்படமுடியாது.</u>***
***<u>நீதிமன்றம் இருவர் (2) பிணை வழங்க அனுமதி வழங்கினால், வங்கிக் கணக்கு வைத்திருக்கும் இருவரும் பிணை முறியில் கையெழுத்திட பிணை நிலையத்தில் இருக்கவேண்டும்.</u>***

### <u>பணம் சாராத பிணை</u>

பிணை வழங்குபவர் உடைமையை ஒப்படைக்கத் தேவையில்லை. ஆனால், அந்த தனி உடைமைகள் பிணைத் தொகைக்கு ஈடானவை என்று நீதிமன்றத்திடம் அறிவிக்க வேண்டும்.
பிணை நடைமுறை தொடர்பான மேல் விவரங்களுக்குத், தயவுசெய்து கீழேயுள்ள இணைப்பை அணுகவும் அல்லது விரைவுத் தகவல் (QR) குறியீட்டை வருடவும்: https://www.judiciary.gov.sg/criminal-post-bail

நீங்கள் யாருடனாவது பேச வேண்டும் என்றால், தயவுசெய்து எங்களை 1800-JUSTICE என்ற எண்ணில் அழைக்கவும்.



# பிணை பற்றி புரிந்துகொள்ளுதல்

SG Courts | STATE COURTS SINGAPORE

## நீதிமன்ற பிணை என்றால் என்ன?

குற்றஞ்சாட்டப்பட்ட ஒருவர் கைது செய்யப்பட்டால், அவர் ஒரு நீதிமன்றத்தால் கையாளப்படும் வரை தடுப்பு காவலில் வைக்கப்படுவது வழக்கம்.

எனினும், கைதான ஒரு நபர் நீதிமன்றத்தில் தோன்றுவார் என்ற உத்தரவாதம் வழங்கும் வகையில், பிணை என்று அறியப்படும் ஒரு குறிப்பிட்ட தொகை வழங்கப்பட்டால், அவர் தடுப்புக் காவலில் இருந்து விடுவிக்கப்படலாம்.

## பிணை வழங்குபவர் என்பவர் யார்?

பிணை வழங்கும் நபர் **பிணை வழங்குபவர்** என அழைக்கப்படுவார் (<u>உத்தரவாதம் வழங்குபவர்</u> என்றும் அறியப்படுவார்)

நீதிமன்றம் உத்தரவிட்ட பிணை தொகைக்கு உத்தரவாதம் வழங்க பிணை வழங்குபவர் ஒப்புக்கொள்கிறார்.





## யார் பிணை வழங்குபவராக இருக்க முடியும்?

- சிங்கப்பூர் குடிமகன் அல்லது நிரந்தரவாசி (நீதிமன்றம் வேறுவிதமாகக் குறிப்பிட்டாலேயன்றி)
- 21 வயது மற்றும் அதற்கும் மேற்பட்டவர்.
- நொடிப்பு நிலையில் இல்லாதவர்.
- குற்றவியல் குற்றச்சாட்டுகள் எதிர்நோக்காதவர்.

***மேல் கூறப்பட்ட நிபந்தனைகள் நிறைவுசெய்யப்பட்டாலும், நீதிமன்றம், பிணை நிபந்தனைகளைத் தீர்மானம் செய்து, யார் பிணை வழங்கமுடியும் என்ற இறுதி முடிவை எடுக்கும்.***

## பிணை வழங்குபவரின் கடமைகள்

குற்றஞ்சாட்டப்பட்டவர் நீதிமன்றம் வருவதையும் மற்றும் அனைத்து பிணை நிபந்தனைகளுக்கும் கட்டுப்படுவதையும் பிணை வழங்குபவர் உறுதி செய்ய வேண்டும். **இது ஒரு மிக முக்கியமான பொறுப்பு.**

குற்றஞ்சாட்டப்பட்டவர் நீதிமன்றத்திற்கு வரத் தவறினால், விளக்கமளிக்க நீதிமன்றத்திற்கு வருமாறு பிணை வழங்கியவர் அழைக்கப்படுவார்.

பிணை வழங்குபவர் **எல்லா பணத்தையும் அல்லது உத்தரவாதமாக முன் வைக்கப்பட்ட தனி உடமைகளையும் இழக்க நேரிடும்.**

## பிணைக்கு உத்தரவாதமாக என்ன வழங்கப்படலாம்?

### <u>பணம் சார்ந்த பிணை</u>

பிணை வழங்குபவர் ரொக்க பணம் அல்லது ரொக்க பணத்துக்கு ஈடான உத்தரவாதத்தை வழங்க வேண்டும் என்று நீதிமன்றம் ஆணையிடலாம்:

- ரொக்க பணம் (S$50,000 வரை) நீதிமன்றத்திடம் செலுத்தலாம்.
- பிணை வழங்குபவரின் கைபேசி இணைய வங்கி செயலி வழி பேநௌ (PayNow) அல்லது நெட்ஸ் (NETS) சேவையைப் பயன்படுத்தலாம்.
- 'பதிவாளர், அரசு நீதிமன்றங்கள்' என்று குறிப்பிட்டு, ஒரு காசாளர் கட்டளையை வழங்கலாம்

வழக்கு முடிந்துவிட்டால், அல்லது பிணை வழங்குபவர் பிணை பொறுப்பிலிருந்து விடுவிக்கப்பட்டால் மற்றும் நீதிமன்றம் பிணை தொகையைப் பறிமுதல் செய்யவில்லை என்றால், பிணை தொகை **21 வேலை நாட்களுக்குள்** பிணை வழங்கியவருக்குத் திரும்பக் கொடுக்கப்படும்.

### <u>பணம் சாராத பிணை</u>

பிணை வழங்குபவர் அவரது தனி உடைமைகளை உத்தரவாதமாக வழங்கி அவற்றின் மதிப்புக்கான ஆதாரத்தை வழங்குமாறும் நீதிமன்றம் ஆணையிடலாம். அந்த தனி உடைமைகள் பிணை வழங்குபவருக்குச் சொந்தமானதாகவும், முழுமையாக பணம் செலுத்தப்பட்டவையாகவும் இருக்க வேண்டும்.
உள்ளடங்கும் உதாரணங்கள்:

- நகைகள்
- கடிகாரங்கள்
- அறைகலன்கள்
- மின்சார சாதனங்கள்
- இதர வீட்டு பொருட்கள்